**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 172/2019 |
| Name | : Gokulakrishnan |
| P.W. | : 7 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **03.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 18.03.2016 அன்று மடத்துக்குளம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது வீரப்பன் மகன் கருப்புச்சாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப மடத்தக்குளம் காவல் நிலைய குற்ற எண். 80/2016 இதச பிரிவுகள் 227, 304(A) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து நீதிமன்றத்திற்கும் அதன் ஒரு நகலை மேல் விசாரணைக்கு காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நிகர் நிலை புகார்தாரர் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தார் என்றால் 18.03.2016ம் தேதி 21.15 மணிக்கு கொடுத்தார். முதல் தகவல் அறிக்கையில் சம்பவம்

நடந்த நேரம் 10.30 மணி என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 7 வது வரியில் பொள்ளாச்சியைச் சேர்ந்த சுப்பிரமணியன் மகன் காளிமுத்து என்கிற வார்த்தைகள் மற்ற வார்த்தைகளில் இருந்து வித்தியாசமாக உள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையின் 12 வது பத்தியில் நேரம் அடித்தல், திருத்தல் உள்ளது என்றால் சரிதான்.

(2) புகார் மனுவில் எழுதப்பட்டுள்ள எழுத்திற்கும், புகார்தாரரின் கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். புகாரை காவல் நிலையத்தில் வைத்து எழுதிக் கொடுத்தார்களா என்றால் ஆமாம். புகார் யாரால் எழுதப்பட்டது என்றால் புகார்தாரருடன் வந்தவர்களால் எழுதப்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் இது குறிப்பிடப்படவில்லை. அ.சா.1 கொடுத்த புகாரில் எதிரி ஓட்டி வந்த வாகனம் எந்த பக்கம் பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்து போன நபர் தலை கவசம் அணிந்திருந்ததாக அ.சா.1 புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார்தாரரின் மகன் கீழே விழுந்து விட்டதை பொய்யாக புகார் கொடுத்து நான் தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.03 18:03:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்